## லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகம் -2021

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கட்டிட திணைக்களத்திற்கு, கட்டிட மறுசீரமைப்பிற்காக செலுத்த வேண்டிய ரூபா 1,135,312 தொகை மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிட திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,135,312 தொகையான கட்டிடத்தை மறுசீரமைக்கும் செலவினம் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | அட்டுறு செலவினமாக இனங்காணக்கூடிய சகல செலவினங்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 830,989 தொகையான கணனி உபகரணங்களுக்காக மீளாய்வாண்டிற்கு ரூபா 212,747 பெறுமானத் தேய்வு செய்யவேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணிப்பீட்டை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |
| (இ) கடந்த ஆண்டில் கணனி பெறுமானத் தேய்வு ரூபா 290,919 குறைத்து காண்பிக்கப்பட்டமை நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிந்துரைகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா (மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத காணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பெறுமானத் தேய்வு பெறுமதி | 2.0 | சொத்துக்கள் கொள்வனவு செய்த திகதி மற்றும் அவற்றின் கிரயத்துடன் பட்டோலை. | அநேகமாக நிலையான சொத்துக்கள் நீண்ட காலத்திற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், கொள்வனவு செய்த தகவல்களை கண்டறிவதற்கு வசதியீனமாக இருந்தது. | பெறுமானத் தேய்வு பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய ஆவணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | இந்த ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்வதற்கும், அண்மைக் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சகல நிலையான சொத்துக்களினதும் பெறுமதிகளை இந்த பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2006 இன் 32 ஆம் இலக்க உபாய வழி ஆய்வுகள் தொடர்பான இலங்கை நிறுவனம் (திருத்த) சட்டம் | | | |
| (i) 10(அ) ஆம் பிரிவு | நிறுவகத்தின் முகாமைத்துவ சபையினால் ஐந்து நபர்களை உள்ளடக்கிய சர்வதேச ஆலோசனை சபையொன்று நியமிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான ஆலோசனை சபையொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | ‘‘சர்வதேச ஆலோசனைச் சபை’’ நியமித்தல் கொள்கைரீதியான விடயமாக இருந்தமையால் உரியவாறு ஆய்வினை மேற்கொண்டதன் பின்னர் அது தொடர்பாக எதிர்வரும் முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சர்வதேச ஆலோசனை சபையொன்றை நியமித்தல் வேண்டும். |
| (ii) 10 உ (1) பிரிவு மற்றும் 10 உ (2) ஆம் | சட்டம் அமுல்படுத்தப்படுகின்ற திகதி அதாவது 2006 செப்டம்பர் 29 | வெளிநாட்டு அலுவல்கள் செயலாளரின் ஆலோசனைகளைப் பெற்று அதன் பிரகாரம் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவுகள் | ஆம் திகதி முதல் பண்டாரநாயக சர்வதேச உயர் ஸ்தானிகர் பயிற்சி நிறுவனம், இந்த நிறுவனத்திற்கு கையளிக்க வேண்டியிருந்ததுடன் , அந்த நிறுவனத்தின் பிரிவொன்றாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய கற்கை பாடநெறிகளை நடாத்துதல் வேண்டும். மேலும் அவற்றில் சேவையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும், நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். எனினும், அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது என பண்டாரநாயக சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2022 நவம்பர் 24 ஆம் திகதிய BIDTI/Admin/Aud/22 ஆம் இலக்க கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (iii) | 10 உ (2)(i) ஆம் பிரிவு | சட்டம் அமுல்படுத்தப்படுகின்ற திகதிக்கு முன்னர் பண்டாரநாயக சர்வதேச உயர் ஸ்தானிகர் பயிற்சி நிறுவனத்தால் நடாத்திச் செல்லப்படுகின்ற ஏதாவது கணக்கு ஒன்றில் செலவு வைக்கப்பட்ட சகல பணமும் நிறுவகத்தின் நிதியத்திற்கு மாற்ற வேண்டியிருந்த | -மேற்படி- | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 1.6.5.3 ஆம் பிரிவு | ஏதாவது வருடத்திற்குரிய ஆண்டறிக்கை அடுத்து வரும் ஆண்டின் மே 31 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், நிறுவகம் 2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கையை சபைக்கு சமர்ப்பித்திருக்க வில்லை. | நிறுவகத்தின் மூலம் தயாரிக்கப்பட்டிருந்த 2016, 2017 மற்றும் 2018 என்ற ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. 2019, 2020 மற்றும் 2021 இன் ஆண்டறிக்கைகள் தாமதமின்றி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஊடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 யூன் 17 ஆம் திகதிய பீஈடீ/03/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு | நிறைவேற்று பணிப்பாளருக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய மாதாந்த படி ரூபா 60,000 ஆக இருந்த போதிலும், 2015 ஆகஸ்ட் முதல் 2022 ஏப்ரல் மாதம் வரை சேவையாற்றிய மூன்று நிறைவேற்று பணிப்பாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 150,000 முதல் ரூபா 180,000 வரையான வீச்சில் 71 மாதங்களுக்காக ரூபா 11,761,000 செலுத்தப்பட்டிருந்தது. அவர்களுக்கு செலுத்த வேண்டிய படி ரூபா 4,260,000 ஆனமையால் ரூபா 7,501,000 | நிறைவேற்று பணிப்பாளருக்கு படி செலுத்துதல் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 3.2.1 ஆம் பிரிவு | நிறுவனத்தில் காணப்பட வேண்டிய பதவிகளின் அளவு, ஆட்சேர்த்தல் நடைமுறை, சம்பள கட்டமைப்பு மற்றும் படிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2018 ஒக்டோபர் 16 ஆம் திகதிய கடிதம் மூலம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக நிதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு பதவியணியினர் விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 6.6 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் உறுதிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் பத்து மாதம் தாமதமாகி 2022 நவம்பர் 24 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்குரிய நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கை 2022 நவம்பர் 09 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க | கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்குரிய | இந்த நிறுவனம் ஆரம்பம் முதல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (01) பந்தி | சட்டத்தின் மூலம் நிறுவகத்தின் பதவியணியினருக்கு சம்பளத்தை நிர்ணயிப்பதற்கான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், சம்பளம் மற்றும் ஆளணி எண்ணிக்கை குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி விடயப் பொறுப்பு அமைச்சர் அல்லது பணிப்பாளர் சபையினால் அவ்வாறான பெறுகைகள் அங்கீகரித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். எனினும், பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் வெளிநாட்டு அமைச்சிலிருந்து நிறுவகத்திற்கு நியமிக்கப்பட்ட ஐந்து உத்தியோகத்தர்களுக்காக ரூபா 836,344 தொகையும், நிறுவனத்தில் பதிற்கடமை கணக்காளருக்கு ரூபா 180,000 தொகையும் மீளாய்வாண்டின் போது படியாக செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களை நியமித்து முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க மற்றும் 2016 ஒக்டோபர் 21 | நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திற்காக 04 சேவை | முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| ஆம் திகதிய 02/2016(i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | தொகுதிகளின் கீழ் மற்றும் மத்திய முகாமைத்துவ மட்டத்திற்காக 03 சேவை தொகுதிகளின் கீழும் அந்தந்த பதவிகள் ஸ்தாபிக்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த மற்றும் ஆகக்கூடிய சம்பளக் குறியீடு 04 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் கீழ் இனங்காணப்படாத நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் (பயிற்சி) மற்றும் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) முறையே ரூபா 2,160,000 மற்றும் ரூபா 1,717,742 தொகைகள் மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தில் செலுத்தப்பட்டிலுந்தது. | | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,075,825 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,397,748 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,473,573 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம் ரூபா 18,646,788 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2006 பெப்ரவரி 23 ஆம் திகதிய அமப 003/214/0202/06 ஆம் இலக்க அமைச்சரவை | நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்ட கொழும்பு 07, ஹோட்டன் பிரதேசம், 24 ஆம் இலக்க | ஆதனங்களின் உரிமை தன்மையை நிறுவகத்திற்கு |

| | | |
|---|---|---|
| தீர்மானத்தின் (அ) பிரிவின் பிரகாரம் கொழும்பு 07, ஹோட்டன் பிரதேசம், 24 ஆம் இலக்க இடத்தில் காணப்படுகின்ற ஆதனங்களின் உரிமைத் தன்மை நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | இடத்தில் காணப்படுகின்ற ஆதனங்களை கையேற்றல் தொடர்பான மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதேச செயலாளரால் 2021 ஏப்ரல் 28 ஆம் திகதிய கடிதம் மூலம் வெளிநாட்டு அலுவல்கள் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கையேற்றல் வேண்டும். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம், நூலகர் மற்றும் தொலைத் தொடர்பு முகாமையாளர் என்ற பதவிகளுக்காக அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் அமர்த்தியிருந்த போதிலும், அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் 2016 இல் செய்திப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதன் மூலம் வெற்றிடமாக காணப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நூலகர் பதவிக்காக ஆட்சேர்த்து படிகள் செலுத்தப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். |